சார்பு நீதிமன்றம் மதுராந்தகம்

MCOP No. 22/2023

பெயர். திரு.தாண்டவராயன் நாள் 23.10.2024
த/பெ. நாராயணசாமி

**மனுதாரர் சா.1 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் முதல் நிலை விசாரணை தொடர்ச்சி**

1. விபத்து சம்மந்தமான முதல் தகவல் அறிக்கை நகல் ம.த.சா.ஆ.1. என் மனைவியின் விபத்துப் பதிவேட்டு நகல் ம.த.சா.ஆ.2. என் மனைவியின் பிரேத பரிசோதனை அறிக்கை நகல் ம.த.சா.ஆ.3. என் மனைவியின் வாரிசு சான்றிதழ் நகல் ம.த.சா.ஆ.4. 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை ம.த.சா.ஆ.5. குற்ற வழக்கின் குற்ற இறுதி அறிக்கை நகல் ம.த.சா.ஆ.6. என்னுடைய ஆதார் அட்டை, மற்ற மனுதாரர்களின் ஆதார் அட்டை நகல்கள் ம.த.சா.ஆ.7 முதல் 10. மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

2. விபத்தை நான் நேரடியாகப் பார்க்கவில்லை என்றால் சரிதான். என் மனைவியின் தொழில் மற்றும் வருமானத்தை நிரூபிக்க ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் கூலி வேலை செய்துதான் என் மனைவி மற்றும் மக்களை காப்பாற்றி வந்தேன் என்றால் சரிதான். என் மனைவி மற்றும் மக்களுக்கு என் வருமானத்தை வைத்து தான் உணவு என்றால் சரிதான். என் மனைவி கோவிலுக்கு பத்து நபர்களுடன் சென்று வரும்போது விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். விபத்து ஏற்படுத்தியதாகக் கூறும் வாகனத்தை ஓட்டியவரின் ஓட்டுநரின் ஓட்டுநர் உரிமத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ம.த.சா.ஆ.5 ல் மேற்கண்ட ஓட்டுநரின் ஓட்டுநர் உரிமம் விபத்து தேதியில் அமலில் இல்லாமல் காலாவதி ஆகிவிட்டது என்றால் சரிதான்.

3. இறப்புச் சான்றிதழ் படி என் மனைவிக்கு வயது 43 என்றால் சரிதான். விபத்து சம்மந்தமாக வேறு நீதிமன்றங்களில் மற்றும் காவல் நிலையங்களில் சாட்சியம் அளிக்கவில்லை என்றால் சரிதான். அஞ்சலி என்பவர்தான் புகார் அளித்துள்ளார் என்றால் சரிதான். முதல் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநருக்கு விபத்து தேதியில் ஓட்டுநர் உரிமம் இல்லை என்பதால் 2ம் எதிர்மனுதாரர் எவ்வித நஷ்ட ஈடும் தர கடமைப்பட்டவர் இல்லை என்றால் சரியல்ல. ம.த.சா.ஆ.5ல் 1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநருக்கு முறையான ஓட்டுநர் உரிமம் இல்லாததால் வாகனம் சிறை பிடிக்கப்பட்டது என்ற குறிப்பு உள்ளது என்றால் சரிதான்.எனவே 2 ம் எதிர்மனுதாரரைப் பொறுத்து மனு தள்ளுபடி செய்யத் தக்கது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.